DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.19/2019**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : காளியம்மாள்
Father/ Husband Name : மணி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.10.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு திருமணத்திற்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தேன். நான் திருமணத்திற்கு 30 பவுன் நகை போட்டு சென்று வந்து துாங்கிக் கொண்டிருந்தேன். அதை 2ம் எதிரியின் அக்கா பார்த்துவிட்டு 2ம் எதிரியிடம் கூற 2ம் எதிரி என்னிடமிருந்த 30 பவுன் நகைகளையும் இடம் வாங்க வேண்டும் என்றும் அந்த நகைகளை வைத்து இடத்தை வாங்கிவிட்டு பிறகு அந்த இடத்தை விற்று நகையை திரும்பதருவதாக சொல்லி கேட்டார்.

2. நானும் நகைகளை 2ம் எதிரியிடம் என் வீட்டில் வைத்து சம்பவத்திற்கு முன்பாகவே கொடுத்தேன். 2ம் எதிரி ஆனால் நகையை திரும்ப தரவில்லை, நானும் பலமுறை சென்று கேட்டேன். அதன் பிறகு 1 ம் எதிரி வந்து செயின்மேரிஸ் ருசோ சிலை அருகே வைத்து நீதானே காளியம்மாள் என்று சொல்லி என்னை வழிமறித்தார். உடனே ஒரு பெரிய காரில் வந்த ராஜா என்பவரை ராஜா வாடா வாடா என்று 1ம் எதிரி கூப்பிட்டார். அப்போது ராஜா என்பவர் கத்தியுடன் வந்தார். அப்போது ராஜாவை சிலையப்பன் என்னை குத்தசொல்லி சொன்னார். 1ம் எதிரியும் கையில் கத்தி வைத்திருந்தார். என்னை 1ம் எதிரி பிடித்து தள்ளினார்

நான் கீழே விழுந்துவிட்டேன். அங்கு கடையில் இருந்தவர்கள் வந்து என்னை தூக்கிவிட்டார்கள்.

3. நான் போய் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 1ம் எதிரி கீழே தள்ளியதில் எனது இடது கைதோள்பட்டை இதுவரை குணமடையவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. செயின்ட்மேரிஸ் ரோட்டருகே நான் மட்டும் தான் வந்து கொண்டிருந்தேனா என்றால் நான் சாலையில் வந்து கொண்டிருந்த யாரோ ஒரு பையனிடம் என்னை செயின்ட்மேரிஸ் அருகே கொண்டுவிட சொன்னேன் அப்போது அந்த பையனையும் அவர்கள் காருக்குள் தூக்கிப் போட்டார்கள். பிறகு நான் சத்தம் போடவும் 1-ம் எதிரி அந்த பையனை மட்டும் தூக்கி வெளியில் போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

2. அந்த பையன் எனக்கு உறவினர் கிடையாது. புகாரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க புகாரில் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். செயின்ட்மேரிஸ் சாலை எப்போதும் கூட்டமாக இருக்கும் என்றால் அப்போது கூட்டமாக இல்லை. மேற்படி சாலை மெயின்ரோடு என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் எனக்கும் எதிரிகளுக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை சம்பந்தமாக தான் பிரச்சனை இருந்துவந்தது என்றும் அதை மனதில் வைத்து பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.